மருந்து செலுத்துவதற்காக பவர் டிரில்லர்களுடன் அட்டாச் செய்யப்பட்ட இன்ஜெக்ஷன் செய்கின்ற முறையும் கையாளப் படுகின்றது. ஜெர்மனியிலிருந்து கிடைத்த உதவியின் மூலம் நல்ல பலன் இதில் ஏற்பட்டிருக்கிறது நீலகிரி மலையிலே.

கொறுக்கை கால்நடைப் பண்ணை

*** 98 வின.—திரு. ந. தருமலிங்கம்:** மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி 'கொறுக்கை' கால் நடைப் பண்ணைக்கு மொத்தமுள்ள கால்நடைகள் எத்தனை?

(இ) இந்தப் பண்ணைக்குச் சொந்தமான சாகுபடி நிலம் எத்தனை ஏக்கர்?

(உ) இந்தப் பண்ணையில் பால் வணிகம் நடைபெறுகிறதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) கொறுக்கை கால் நடைப் பண்ணையில் (உம்பளச்சேரி) மாடுகள் 432 உள்ளன.

(இ) பண்ணையின் மொத்தப் பரப்பளவு 493.48 ஏக்கரா.

(உ) ஆம்.

திரு. ந. தருமலிங்கம்: அகில இந்திய கால்நடை இனத்தில் சேர்க்கப்பட்டுள்ள மிக முக்கியமான கால்நடை இனம் உம்பளச் 10-00 மூ.ப.
சேரி கால்நடை இனம். இதைப் பேணிக் காக்கவும், வளர்க்கவும் கொறுக்கை கால்நடைப் பண்ணை பயன்படுத்தப்பட வேண்டும். இப்போது இந்தக் கால்நடைகளை வெளியிலிருந்து வந்து கசாப்புக்காக வாங்கிக் கொண்டு போய்விடுவதாகத் தெரிகிறது. இதனால் அந்த இனம் அழிந்துவிடுமோ என்று தஞ்சை மாவட்ட விவசாயிகள் கவலைப்படுகின்றார்கள். இதைத் தவிர்க்க தஞ்சை மாவட்டத்திலுள்ள அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையில் அரசாங்கம் தக்க முடிவு எடுத்து இந்த உம்பளச்சேரி இனம் கசாப்புக் கடைக்கு அனுப்பப்படாமல் இருக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கொறுக்கையில் உள்ள உம்பளச்சேரி இன கால்நடைப் பண்ணையை மூடிவிடலாம் என்று ஆலோசனை கூறப்பட்டது. அந்த ஆலோசனையின்பேரில் நானே நேரில் சென்று பார்த்ததில் இந்த உம்பளச்சேரி இனம் காக்கப் படக்கூடிய இனம் என்று உணர்ந்த காரணத்தால் பண்ணையை மூடாமல் பண்ணையை அபிவிருத்தி செய்யத் தகுந்த அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள். இந்த உம்பளச்சேரி இனத்திற்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி: இந்த உம்பளச்சேரி இன மாடுகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று அதிகாரிகளிடத்தில் சொல்லும்போது, பால் அதிகமாகக் கொடுக்கும் இனத்திற்குத்

தான் முதலிடம் கொடுக்க வேண்டுமென்றும், கடின உழைப்புக்காக இருக்கிற உம்பளச்சேரி இனத்தைப் பற்றி அதிகக் கவனம் செலுத்துவதற்கில்லை என்றும் ஸ்டேட் டூர் சென்றபோது அதிகாரிகள் நேரிலேயே சொன்னார்கள். தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்தவரை உம்பளச்சேரி இனத்தைப் போல் வேறு எந்த மாடும் வேலை செய்ய முடியாது. ஆகவே, அந்த இனத்தை அபிவிருத்தி செய்ய ஒரு சலுகை கொடுக்க வழி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு மிகவும் துணையாக இருக்கக்கூடிய உம்பளச்சேரி இனம் அழிக்கப்பட நிச்சயமாக அரசாங்கம் துணைபோகாது. உம்பளச்சேரி இனத்தில் பால் அதிகமாக கிடைக்காவிட்டாலும் கடின உழைப்பிற்கு அது மிகவும் தேவையாக இருக்கிறது. எனவே, அந்த இனத்திற்கு எந்தவித அபாயமும் ஏற்படாதிருக்க வழி செய்வதோடு அதை அபிவிருத்தி செய்வதிலும் கவனம் செலுத்தப்படும்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : கொறுக்கை கால்நடைப் பண்ணைக்குச் சொந்தமான நிலங்களில் எத்தனை ஏக்கர்களில் சாகுபடி செய்து வருகிறார்கள் ? கீழ்த் தஞ்சையில் உள்ள அதிகமாக இருக்கக்கூடிய நிலங்களில் உம்பளச்சேரி இனந்தான் திறமையாக வேலை செய்ய முடியும். ஆகவே, அந்த இன மாடுகளை அபிவிருத்தி செய்ய ஊக்கம் காட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : திரு. மணி அவர்களுடைய கேள்விக்குப் பதில் சொன்னது போல் அந்த இனத்தைப் பாதுகாப்பதோடு அபிவிருத்தி செய்வதிலும் அதிகக் கவனம் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பண்ணையின் நிலங்கள் நல்ல முறையில் சாகுபடி செய்வதற்குரிய நிலங்களாக இல்லாமல் உப்புக் கலந்த நிலமாக இருப்பதால் 10 ஏக்கர் வரைதான் விளைச்சல் தரக்கூடிய நிலை இருக்கிறது. மற்ற நிலங்கள் மேய்ச்சல் நிலங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*)இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் கொடுத்துள்ள ஒத்தி வைப்புத் தீர்மானம் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும். திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.